# EVM BROCHURE FOR CANDIDATES & POLITICAL PARTIES

January 2024




भारत निर्वाचन आयोग
Election Commission of India




**ELECTRONIC VOTING MACHINES & VVPATS** are manufactured by M/s. Bharat Electronics Limited (A PSU under Ministry of Defence) and M/s. Electronics Corporation of India Limited (A PSU under Department of Atomic Energy).

**ELECTRONIC VOTING MACHINE (EVM):** An EVM consists of two units, namely, Control Unit (CU) and Ballot Unit (BU). A Ballot Unit caters up to16 candidates. 24 (Twenty-four) Ballot Units can be cascaded together for catering to 384 candidates (including NOTA) with one Control Unit. On the right side of the BU along the candidates' vote button, digits 1 to 16 are embossed in Braille signage for guidance of visually impaired electors. It runs on a power pack (Battery) having 7.5 volts.

**VOTER VERIFIABLE PAPER AUDIT TRAIL (VVPAT):** Voter Verifiable Paper Audit Trail is an independent system attached with the Electronic Voting Machines that allows the voters to verify that their votes are cast as intended. VVPAT runs on a power pack (Battery) of 22.5 volts.

## FUNCTIONING OF EVM AND VVPAT:



### CONTROL UNIT

is kept with the Presiding Officer/ Polling Officer and Ballot Unit & VVPAT are kept in the Voting Compartment.

- When a vote is cast on Ballot Unit by pressing candidate button (Blue Button) of his/her choice, **RED** light glows against that particular candidate button.







- On other hand, a slip is printed on the VVPAT printer containing the serial number, name and symbol of the candidate and remains exposed through a transparent window for about **7 seconds.**
- Thereafter, this printed slip automatically gets cut and falls in sealed drop-box of the VVPAT.
- Thereafter, a beep sound is heard from the Control Unit to ensure that vote has been registered successfully.



| Features | Purpose | Ruled Out |
|---|---|---|
| Standalone | EVM used by the Commission is a stand-alone non-networked machine which can be connected to EVM components only (e.g. CU, BU, VVPAT, SLU, P-FLCU). | Any connection with external world through wire or wireless |
| One Time Programmable (OTP) Chip | The machine is electronically protected to prevent any tampering/ manipulation. The programme (software) used in these machines is burnt into a One Time Programmable (OTP) chip so that it cannot be altered or tampered with. | Any alteration or tampering |
| Unauthorized Access Detection Module (UADM) | Software as well as polled data is stored in the micro- controller of the Control Unit of EVM, which is protected by a Secure Module. Any attempt to open the Secure Module at any time whether the machine is on or off, renders the machine in factory mode and the machine becomes inoperative. | Any access to microcontroller or memory |
| No Radio Frequency Transmission or Reception Capability | Any tampering of ECI-EVM by coded signals by wireless, Bluetooth or WiFi is ruled out as EVM does not have any radio frequency (RF) communication capability, hence, cannot communicate through Wifi, Bluetooth etc. | Any tampering by coded signals by wireless like Bluetooth or Wifi |
| Dynamic Coding of Key Presses | Every key press is coded dynamically making it impossible for anyone to decode the signals between Control Unit and Ballot Unit. | Any decoding of the signal between Control Unit, Ballot Unit and VVPAT |

| Features | Purpose | Ruled Out |
|---|---|---|
| Strong Mutual Authentication Capability | The strong mutual authentication capability ensures that any unauthorized devices cannot interact with EVM | Any interaction with any unauthorized devices |
| Real Time Clock for date and time stamping key presses | Every authorised or un-authorised key press is recorded with date and time stamp on real time basis. | Any malpractice |

**Various activities related to EVMs/VVPATs carried out with the involvement ofthe representatives of National & State Recognised Political Partiesand Candidates as given under:**

## STORAGE OF EVMS AND VVPATS DURING NON-ELECTION PERIOD

- Generally, EVM-VVPATs are stored at district headquarters under custody of District Election Officer (DEO).
- EVM-VVPATs are stored under double lock system with all keys of Lock-1 with DEO and all keys of Lock-2 with Deputy DEO or equivalent.
- EVM-VVPAT warehouse/strong room has minimum ½ section armed security, CCTV coverage, log-book etc.
- During non-election period till finalization of list of the contesting candidates, EVM-VVPAT warehouses are opened/closed (for any purpose like movement, inspection etc.) in the presence of the representatives of National and State Recognised Political Parties.
- With finalization of list of the contesting candidates, candidates and their representatives are involved while opening and closing of EVM-VVPAT warehouses/strong room.
- Opening and Closing of EVM warehouse/strong room is done under videography.

- With finalization of list of the contesting candidates, candidates and their representatives are involved while opening and closing of EVM-VVPAT warehouses/strong room.
- Opening and Closing of EVM warehouse/strong room is done under videography.

## ▶ FIRST LEVEL CHECKING OF EVMS AND VVPATS

- First Level Checking of EVMs and VVPATs is conducted before every election by the authorised engineers of Bharat Electronics Limited (BEL) and Electronics Corporation of India Limited (ECIL) at District Election Officer (DEO) level.
- For this purpose, National and State Recognised Political Parties at district headquarters are invited in writing by DEO concerned at least two days before the beginning of FLC and a copy is endorsed to state headquarters.
- The representatives of National and State Recognised Political Parties are involved to oversee entire FLC process and also to put their signatures on the paper seal (Pink Paper Seals affixed on the Control Units) and various documents related to FLC.
- Functionality check of every EVM & VVPAT is conducted using Pre FLC unit (PFLCU).
- Dummy Symbols are loaded in every VVPAT using Symbol Loading Unit (SLU). Symbols being loaded in VVPATs are simultaneously displayed on the monitor/TV screen for viewing by representatives of Political Parties.
- During FLC cabinet of EVMs are opened in the presence of political party representatives to check there is no spurious component. Further, casting of 6 votes against each of the candidate buttons (i.e. total 96 votes), observation of result and clearing of mock poll data are done for each EVM & VVPAT.

- In addition, higher mock poll is conducted in 5% randomly selected EVMs and VVPATs (i.e. 1200 votes in 1% EVMs, 1000 votes in 2% EVMs and 500 votes in 2% EVMs). The electronic result of EVM is tallied with the VVPAT slips count. The representatives of Political Parties are allowed to pick 5% EVMs and VVPATs randomly and also to do mock poll.
- Green colour stickers are pasted on the FLC-OK machines and Red colour stickers are pasted on the FLC-Rejected machines.
- Status of FLC-OK and FLC-Rejected machines is updated in the EVM Management System (EMS) using mobile app.
- List of FLC OK EVMs and VVPATs generated from EMS is shared with all National and State Recognised Political Parties.
- The representatives of National and State Recognised Political Parties are allowed to sign the seals, forms register during FLC.
- FLC-Reject machines are sent to manufacturers for rectification.
- FLC-OK machines are stored in Strong Rooms having double lock, CCTV coverage and minimum 1 section Armed Security.

## EVMS AND VVPATS FOR TRAINING AND AWARENESS

- After completion of FLC, up to 10% EVMs and VVPATs are taken out for awareness and training purpose in the presence of National and State Recognised Political Parties.
- The list of awareness and training EVMs and VVPATs is shared with the representatives of the political parties.
- EVMs & VVPATs taken out for training & awareness are stored separately in a separate designated warehouse.
- EVM Demonstration Centres (EDC) are set up at district election office and at the returning officers headquarters/revenue sub-division offices till the announcement of election.

- Mobile Demonstration Van (MDV) are deployed for every assembly constituency/segment to cover all polling locations/electoral literacy clubs.
- Training & Awareness EVMs/VVPATs are reintroduced for election, if required, after de-novo FLC, Randomizations and Commissioning.


## RANDOMIZATIONS OF EVMS AND VVPATS

- Randomizations of EVMs and VVPATs are done using EVM Management System (EMS) developed by ECI.
- First randomization of EVMs and VVPATs is conducted in the presence of National and State Recognised Political Parties to allocate EVMs and VVPATs Assembly constituency/ segment-wise.
- List of first randomized EVMs and VVPATs (AC/AS-wise) is shared with National and State Recognised Political Parties.
- After finalization of list of contesting candidate, list of first randomized EVMs and VVPATs (AC/AS-wise) is also shared with contesting candidate.
- Second randomization of EVMs and VVPATs is conducted, before commissioning of EVMs and VVPATs, in the presence of contesting candidates to allocate polling station wise and reserve machines.
- The list of second randomized EVMs and VVPATs is shared with contesting candidates.

## COMMISSIONING OF EVMS AND VVPATS

- Commissioning of EVMs and VVPATs for use in poll is done in the presence of contesting candidates by the district official.
- On Commissioning day EVM-VVPAT strong room is opened in the presence of candidates/their representatives under videography.

- Symbol loading in every VVPAT is done by using Symbol Loading Unit (SLU). Symbols being loaded in VVPATs are simultaneously displayed on the monitor/TV screen for viewing by candidates/their representatives.
- During Commissioning every EVM & VVPAT is checked by casting 1 vote to each candidate button including NOTA.
- In addition, higher mock poll of 1000 votes is done in 5% randomly selected EVMs and VVPATs and electronic result of EVM is tallied with the VVPAT slips count.
- Candidates/their representatives are allowed to pick 5% EVMs and VVPATs randomly and also to do mock poll.
- If any EVM-VVPAT assigned to the polling station is found non-functional during commissioning, the same is replaced with reserve EVM/VVPAT.
- Candidates/their representatives are allowed to sign the seals used for sealing EVMs and VVPATs.
- After Commissioning of EVM-VVPAT, they are kept in the strong room in the presence of candidates/their representatives under double lock system.



## DISPERSAL OF EVMS AND VVPATS WITH POLLING PARTIES

- On dispersal day EVM-VVPAT strong room is opened in the presence of candidates/their representatives under videography.
- Dispersal of EVMs and VVPATs is done in the presence of the candidates/their representatives.
- If any EVM-VVPAT found non-functional during dispersal, the same is replaced with reserve EVM/VVPAT.

## POLL DAY

- On Poll day 90 minutes before the Actual Poll start time, mock poll of atleast 50 votes (minimum 1 vote to each candidate including NOTA) is conducted at every polling station in the presence of the polling agents nominated by the contesting candidates. Electronic Result of mock poll is tallied with the VVPAT slip count.
- Mock poll data is cleared from the Control Unit and mock poll VVPAT slips are kept in the black envelope and sealed with Pink Paper Seal.
- Presiding Officer prepare the Mock Poll Certificate in this effect.
- Before starting actual poll, Control Unit is sealed with Green Paper Seal, Special Tag and Address Tag. VVPAT drop box (Ballot compartment) is also sealed using Address Tags.
- On completion of Poll, presiding officer press the 'CLOSE' button of Control Unit to close the poll. Battery is removed from VVPAT. EVM & VVPAT are kept in the respective carrying cases and sealed with address tags.
- Polling Agents are allowed to sign the seals used in sealing EVMs and VVPATs (before commencement of poll and on close of poll).
- Polling Agents nominated by the contesting candidates are allowed to remain in polling stations to observe polling process.

- A copy of Form 17C containing details of voters, EVM-VVPAT & seals used, including votes polled in EVM etc. is provided to polling agents.

## TRANSPORTATION OF POLLED EVMS AND VVPATS FROM POLLING STATIONS TO COLLECTION CENTRE

- After completion of poll, EVMs & VVPATs are transported from polling station to collection centre under escort.
- Candidates/Polling agents are allowed to follow vehicles carrying polled EVMs and VVPATs.

## STORAGE OF EVMS AND VVPATS AFTER POLL

- Polled EVMs and VVPATs are stored in the strong room in the presence of Candidates/their representatives.
- Candidates/their representatives are also allowed to put their seals on the locks of the strong room.
- Polled EVM Strong Room has minimum 1 platoon of armed security (CAPF) and CCTV coverage.
- Polled EVM Strong Room has two-cordon security. Inner cordon under CAPF and outer cordon under State Armed Police. No one is allowed to enter inner cordon.
- Candidates/their representatives are allowed to stay to watch the Strong Room, if entrance of the strong room is not visible, CCTV display facility is provided. Un-polled non-functional and unused reserve EVMs & VVPATs are stored separately under security.


## COUNTING DAY

- Polled Strong Room is opened in the presence of Candidates/their representatives, Returning Officer, ECI Observer on counting day under videography.

- Counting of votes is done in the presence of candidates and counting agents appointed by them.
- On the counting day, Control Units of EVMs are brought to the counting table from the strong room under CCTV coverage, and result is seen on the display of the CU by pressing 'RESULT' button on Control Unit after Seal verification by the Candidates/Counting Agents.
- EVM wise result is recorded by Counting Supervisor in Form 17 C and sent to RO for compilation of round wise result.
- After completion of counting of votes, mandatory verification of VVPAT slips of randomly selected 5 polling stations per assembly constituency/segment is conducted.
- After completion of counting, power packs are removed from the Control Units and Control Units are sealed in their carrying cases.
- VVPAT slips are removed from all VVPATs and kept VVPAT -wise in sealed envelopes under CCTV.
- Thereafter, EVMs are kept in the EVM Strong Room and sealed envelopes of VVPAT slips are kept with the statutory documents in separate trunk.
- Candidates/their representatives are allowed to sign the seals.

**NOTE: For details on Technical Features and Administrative procedures on EVMs & VVPATs kindly refer presentation on EVM, Status Paper on EVM and Manual on EVM available on ECI website.**

*****



HOW TO CAST
YOUR VOTE
USING EVM & VVPAT
1
ENTER THE BOOTH
The Presiding Officer will enable the ballot Unit while you enter the polling compartment.
Ready
2
CAST YOUR VOTE
Press the Blue Button on the Ballot Unit against the name /symbol of candidate of your choice.
3
SEE THE LIGHT
The red light against the name/symbol of candidate chosen will glow
4
SEE THE PRINT
The Printer will print a ballot slip containing Serial Number, Name and Symbol of the chosen Candidate as shown.
* The slip will be visible for about 7 second
See the print through the glass, as the printout will not be given to you
NOTE!
If you do not see the ballot slip and hear the loud beep please contact the Presiding officer.
भारत निर्वाचन आयोग
Election Commission of India

# வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் குறித்த சிற்றேடு

ஜனவரி 2024




Election Commission of India
இந்திய தேர்தல் ஆணையம்




**வாக்குப்பதிவு கருவி** **வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவி** **கட்டுப்பாட்டு கருவி**

**மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள்** ஆகியவை திருவாளர்கள் இந்திய மின்னணு நிறுவனம் (பாதுகாப்பு அமைச்சக கட்டுப்பாட்டின் கீழ் வரும் ஒரு பொதுத்துறை நிறுவனம்) மற்றும் திருவாளர்கள் இந்தியா மின்னணுவியல் கழகம் (அணுசக்தி துறை கட்டுப்பாட்டின் கீழ் ஒரு பொதுத்துறை நிறுவனம்□ வாயிலாக தயாரிக்கப்படுகின்றன)

**மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM):** ஆஒரு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் கட்டுப்பாட்டு கருவி (CU) மற்றும் வாக்குப்பதிவு கருவி (BU) என இரண்டு கருவிகள் உள்ளன. ஒரு வாக்குப்பதிவு கருவியில் 16 வேட்பாளர் விவரங்களை உள்ளிட முடியும். ஒரு கட்டுப்பாட்டு கருவியுடன் 384 வேட்பாளர்கள் (நோட்டா உட்பட) விவரங்களை கொண்ட 24 (இருபத்தி நான்கு) வாக்குப்பதிவு கருவிகளை இணைத்து வைக்கமுடியும். வாக்குப்பதிவு கருவியின் வலது பக்கத்தில் வேட்பாளர்களின் வாக்குப் பொத்தானுடன் பார்வையற்ற வாக்காளர்களுக்கான வழிகாட்டுதலுக்காக 1 முதல் 16 வரையிலான இலக்கங்கள் பிரெய்லி முறையில் பொறிக்கப்பட்டுள்ளன. இது 7.5 ஆற்றல் வோல்ட் கொண்ட மின்கலத்தால் இயங்குகிறது.

**வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவி (VVPAT):** வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவி என்பது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் இணைக்கப்பட்ட ஒரு தனியான கருவியாகும், இது வாக்காளர்கள் தாங்கள் செலுத்திய வாக்குகள் சரியாக பதிவாகியுள்ளதா என்பதைச் சரிபார்க்க உதவுகிறது. வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவி 22.5 வோல்ட் ஆற்றல் கொண்ட மின்கலத்தால் இயங்குகிறது.


## மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவி செயல்படும் முறை



**கட்டுப்பாட்டு கருவி,** வாக்குச்சாவடி தலைமை அலுவலரிடம்/ வாக்குப்பதிவு அலுவலரிடம் வைக்கப்பட்டுள்ளது வாக்குப்பதிவு கருவி மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவி வாக்குகளை பதிவு செய்யும் பகுதியில் வைக்கப்பட்டிருக்கும்.

- வாக்காளர் தாம் விரும்பும் வேட்பாளருக்கான பொத்தானை (நீல பொத்தான்) அழுத்துவதன் வாயிலாக வாக்குப்பதிவு கருவியில் வாக்களிக்கும் போது, குறிப்பிட்ட வேட்பாளர் பொத்தானுக்கு நேராக சிவப்பு விளக்கு ஒளிரும்.








- மறுபுறம், வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவி அச்சுப்பொறியில் வேட்பாளரின் வரிசை எண், பெயர் மற்றும் சின்னம் அடங்கிய ஒரு சீட்டு அச்சிடப்பட்டு சுமார் 7 வினாடிகளுக்கு தெளிவாக தெரியும் வகையில் சாளரத்தின் வாயிலாக சுமார் 7 வினாடிகளுக்கு கண்களுக்கு புலப்படும்.

- அதன்பின்னர், இந்த அச்சிடப்பட்ட சீட்டு தானாகவே துண்டிக்கப்பட்டு வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவியின் முத்திரையிடப்பட்ட சீட்டு சேகரிப்பு பகுதியில் விழும்.

- அதன் பின்னர், வாக்களிப்பு வெற்றிகரமாகப் பதிவு செய்யப்பட்டதை உறுதிசெய்ய கட்டுப்பாட்டு கருவியில் இருந்து பீப் ஒலி கேட்கும்.



| சிறப்பம்சங்கள் | நோக்கம் | விலக்கப்பட்டவை |
|---|---|---|
| தனிநிலை | தேர்தல் ஆணையத்தால் பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் என்பது வலையமைப்பு அற்ற தனித்த இயந்திரமாகும், இது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் கூறுகளுடன் மட்டுமே இணைக்கப்படும் (எ.கா. கட்டுப்பாட்டு கருவி, வாக்குப்பதிவு கருவி, வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவி, சின்னங்கள் உள்ளீடு, முதல் நிலை சரிபார்ப்பு). | கம்பி அல்லது கம்பியில்லா வாயிலாக வெளி உலகத்துடன் யாதொரு தொடர்பும். |
| ஒரு முறை நிரல்படுத்தக்கூடிய (OTP) சில்லு (Chip) | இந்த இயந்திரம் எந்த வித சேதம் ஏற்படுத்துவதிலிருந்தும் / தவறான முறையில் பயன்படுத்துவதை தடுக்கும் வகையிலும் மின்னணு முறையில் பாதுகாக்கப்படுகிறது. இந்த இயந்திரங்களில் பயன்படுத்தப்படும் நிரல் (மென்பொருள்) ஒரு முறை நிரல்படுத்தக்கூடிய (OTP) சில்லுவில் பதிவேற்றப்படுகிறது, இதனால் அதை மாற்றவோ அல்லது சிதைக்கவோ முடியாது. | ஏதேனும் மாற்றம் அல்லது சேதம் ஏற்படுத்துதல் |
| அங்கீகரிக்கப்படாத அணுகல் கண்டறிதல் தொகுதி (UADM) | மென்பொருள் மற்றும் வாக்களிக்கப்பட்ட தரவுகள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் கட்டுப்பாட்டு கருவியின் மைக்ரோ-கன்ட்ரோலரில் சேமிக்கப்படுகிறது. இது பாதுகாப்புத் தொகுதியால் பாதுகாக்கப்படுகிறது. எந்திரம் "ON" அல்லது "OFF" இல் இருந்தாலும் எந்த நேரத்திலும் பாதுகாப்புத் தொகுதியை திறப்பதற்கு முயற்சிக்கும் போது, இயந்திரம் மொத்த தொடக்க நிலைக்கு சென்றுவிடுவதுடன் இயந்திரம் செயல்படாத நிலைக்கும் கொண்டு சென்றுவிடும். | மைக்ரோகண்ட்ரோலர் அல்லது நினைவகத்தினை முயற்சித்தல். |
| ரேடியோ அலைவரிசை பரிமாற்றம் அல்லது ஏற்றுக்கொள்ளும் நிலை இல்லாமை | கம்பியில்லா, முறை ஊடலை (Bluetooth) அல்லது அருகலை(wifi) வாயிலாக குறியீட்டு சமிக்ஞைகளை கொண்டு இந்திய தேர்தல் ஆணையத்தின் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தை சேதப்படுத்துவது இயலாத ஒன்றாகும். ஏனெனில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்துக்கு ரேடியோ அலைவரிசை (RF) தொடர்பு திறன் இல்லை, எனவே வைஃபை, அல்லது அருகலை (wifi), ஊடலை (Bluetooth) போன்றவற்றின் வாயிலாக தொடர்பு கொள்ள முடியாது. | ஊடலை (Bluetooth) அல்லது அருகலை (wifi) போன்ற கம்பியில்லா வாயிலாக குறியீட்டு சமிக்ஞைகள் வாயிலாக ஏதேனும் சேதம் ஏற்படுத்துதல் |
| முக்கிய பொத்தான் அழுத்தங்களின் இயக்க குறியீட்டு முறை (Dynamic coding) | ஒவ்வொரு விசை அழுத்தமும் மாறும் வகையில் குறியிடப்படுகிறது, இதனால் கட்டுப்பாட்டு கருவி மற்றும் வாக்குப் பதிவு கருவிக்கு இடையே உள்ள சமிக்ஞைகளை யாராலும் இடைமறித்து மாற்றம் செய்ய இயலாது | கட்டுப்பாட்டு கருவி, வாக்குப்பதிவு கருவி மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவி ஆகியவற்றுக்கு இடையிலான சமிக்ஞைகளை இடைமறித்தல் |

| சிறப்பம்சங்கள் | நோக்கம் | விலக்கப்பட்டவை |
|---|---|---|
| வலுவான இருவழி அங்கீகார திறன். | வலுவான இருவழி அங்கீகார திறன் என்பது அங்கீகரிக்கப்படாத சாதனங்கள் மின்னணு வாக்குப்பதிவு கருவியுடன் தொடர்புகொள்ள முடியாது என்பதை உறுதி செய்கிறது. | யாதொரு அங்கீகரிக்கப்படாத சாதனங்களுடனான யாதொரு தொடர்பு ஏற்படுத்துதல். |
| விசைபொத்தானை அழுத்தி நாள் மற்றும் நேரம் குறித்த தகவலை உட்செலுத்துவதற்கான/ பதிவு செய்வதற்கான நிகழ் நேர கடிகாரம். | ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்படாத விசை பொத்தான்கள் வாயிலாக உட்செலுத்தும் / பதிவு செய்யும் நாள் மற்றும் நேரம் குறித்த தகவல் உண்மையான நிகழ் நேர அடிப்படையில் பதிவு செய்யப்படுகிறது. | யாதொரு முறைகேடு செய்தல். |

**தேசிய மற்றும் மாநிலத்தின் அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்களின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்படும் மின்னணு வாக்குப்பதிவு கருவிகள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் வருமாறு:**

➤ **தேர்தல் நடைபெறாத காலங்களில் மின்னணு வாக்குப்பதிவு கருவிகளையும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளையும் பாதுகாப்பாக வைத்தல்.**

- பொதுவாக, மின்னணு வாக்குப்பதிவு கருவிகள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் மாவட்டத் தலைமையிடத்தில் மாவட்டத் தேர்தல் அலுவலரின் (DEO) பாதுகாப்பில் வைக்கப்படும்.
- மின்னணு வாக்குப்பதிவு கருவிகள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள், இரண்டு பூட்டுகளால் பூட்டப்பட்டு மாவட்டத் தேர்தல் அலுவலரிடம் (DEO) பூட்டு-1-இன் அனைத்து திறவுகோல்களும் மாவட்டத் துணை தேர்தல் அலுவலரிடம் (DEO) அல்லது அதற்கு சமமான பதவித்தரம்கொண்ட அலுவலரிடம் பூட்டு -2-இன் அனைத்து திறவுகோல்களும் பாதுகாக்கப்படும் .
- மின்னணு வாக்குப்பதிவு கருவிகள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் பாதுகாத்து வைக்கப்படும் கிடங்கு/ காப்பு அறையில் குறைந்தது பாதியளவு ஆயுதக் காவல் பாதுகாப்பு, CCTV கண்காணிப்பு, குறிப்பு புத்தகம் போன்றவை இருக்கும்.
- தேர்தல் நடைபெறாத காலங்களில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை இறுதி செய்யும் வரை, தேசிய மற்றும் மாநில அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் பாதுகாகப்பட்டுள்ள காப்பு அறைகள் (இயக்கம், ஆய்வுசெய்தல் போன்ற யாதொரு நோக்கத்திற்காக) திறக்கப்படும்/ மூடப்படும்.

- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை இறுதி செய்த பின்னர், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் பாதுகாகப்பட்டுள்ள காப்பு அறைகளை திறக்கும்போதும் மூடும் போதும், வேட்பாளர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் உடனிருப்பர்.

- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பாதுகாத்து வைக்கப்படும் கிடங்கினை/ காப்பு அறையை திறக்கும்போதும் மூடும்போதும் வீடியோ பதிவு செய்யப்படுகிறது.

## மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் முதல் நிலை சரிபார்ப்பு

- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் முதல் நிலை சரிபார்ப்பு ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும் மாவட்ட தேர்தல் அலுவலர் (DEO) நிலையில், பாரத மின்னணு நிறுவனம் (BEL) மற்றும் இந்திய மின்னணுக் கழகத்தின் (ECIL) அங்கீகாரம்பெற்ற பொறியாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது.

- இந்த நோக்கத்திற்காக, முதல் நிலை சரிபார்ப்பு தொடங்குவதற்கு குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னதாக, மாவட்டத் தலைமையிடத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகள் சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலரால் எழுத்துப்பூர்வமாக அழைக்கப்படுவர். மேலும் அதன் ஒரு நகல் மாநில தலைமையிடத்திற்கு மேற்குறிப்பிடப்படுகிறது.

- அங்கீகாரம் பெற்ற தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முதல் நிலை சரிபார்ப்பு செய்முறையையும் மேற்பார்வையிடுவதோடு, காகித முத்திரை (கட்டுப்பாட்டு கருவிகளில் ஒட்டப்பட்டுள்ள இளஞ்சிவப்பு காகித முத்திரைகள்) மற்றும் முதல் நிலை சரிபார்ப்பு தொடர்பான பல்வேறு ஆவணங்களிலும் தங்கள் கையொப்பங்களை இடுவர்.

- ஒவ்வொரு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவியின் இயக்கத்தன்மை சரிபார்ப்பு, முந்தைய முதல் நிலை சரிபார்ப்புக்கு கருவியை (PFLCU) பயன்படுத்தி நடத்தப்படுகிறது.

- வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவி ஒவ்வொன்றிலும் சின்னங்கள் உள்ளீடு செய்யும் பிரிவு (SLU) வாயிலாக மாற்று சின்னங்கள் உள்ளீடு செய்யப்படும். வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளில் உள்ளீடு செய்யப்படும் சின்னங்கள் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் காண்பதற்காக ஒரே நேரத்தில் திரையில் /தொலைக்காட்சித் திரையில் காட்சிப்படுத்தப்படும்.

- முதல் நிலை சரிபார்ப்பின் போது, போலியான கருவிகள் எதுவும் இல்லை என்பதைச் சரிபார்ப்பதற்கு அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு கருவிகள் திறக்கப்படுகின்றன. மேலும், ஒவ்வொரு மின்னணு வாக்குப்பதிவு கருவியிலும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவியிலும் உள்ள ஒவ்வொரு வேட்பாளருக்கும் நேராகவுள்ள பொத்தான்கள் ஒவ்வொன்றிற்கும் 6 வாக்குகள் (அதாவது மொத்தம் 96 வாக்குகள்) பதிவு செய்யப்பட்டு, முடிவுகளைக் கவனித்து, மாதிரி வாக்குப்பதிவு தரவுகளை அழித்தல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

- இத்துடன், அங்கொன்றுமிங்கொன்றுமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 5% மின்னணு வாக்குப்பதிவு கருவிகளில் / வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளில் அதிகளவில் மாதிரி வாக்குப்பதிவு நடத்தப்படுகிறது (அதாவது 1% மின்னணு வாக்குப்பதிவு கருவிகளில் 1200 வாக்குகள், 2% மின்னணு வாக்குப்பதிவு கருவிகளில் 1000 வாக்குகள் மற்றும் 2% மின்னணு வாக்குப்பதிவு கருவிகளில் 500 வாக்குகள்). மின்னணு வாக்குப்பதிவு கருவிகளின் முடிவுகள் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவியின் சீட்டுகளின் எண்ணிக்கையுடன் கணக்கிடப்படுகிறது. அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் 5% மின்னணு வாக்குப்பதிவு கருவிகளை/ வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளை அங்கொன்றுமிங் கொன்றுமாக தேர்வு செய்யவும் மாதிரி வாக்குப்பதிவு நட்த்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.
- முதல் நிலை சரிபார்ப்பு நிறைவடைந்த கருவிகளில் பச்சை வண்ண ஒட்டுத்தாள் ஒட்டப்படுகின்றன. மேலும் முதல் நிலை சரிபார்ப்பில் நிராகரிக்கப்பட்ட கருவிகளில் சிவப்பு வண்ண ஒட்டுத்தாள் ஒட்டப்படுகின்றன.
- கைபேசி செயலியைப் பயன்படுத்தி மின்னணு வாக்குப்பதிவு கருவிகள் மேலாண்மை அமைப்பில் (EMS) முதல் நிலை சரிபார்பு நிறைவடைந்த மற்றும் முதல் நிலை சரிபார்ப்பில் நிராகரிக்கப்பட்ட கருவிகளின் நிலை நாளதுவரையாக்கப்படுகிறது.
- மின்னணு வாக்குப்பதிவு கருவிகள் மேலாண்மை (EMS) அமைப்பிலிருந்து பெறப்பட்ட முதல் நிலை சரிபார்ப்பு நிறைவடைந்த மின்னணு வாக்குப்பதிவு கருவிகள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் பட்டியல் அங்கீகாரம் பெற்ற அனைத்து தேசிய மற்றும் மாநிலத்தின் அரசியல் கட்சிகளுடனும் பகிரப்படுகிறது.
- முதல் நிலை சரிபார்ப்பின் போது அங்கீகாரம் பெற்ற தேசிய மற்றும் மாநிலத்தின் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முத்திரைகள் படிவங்கள் குறித்த பதிவேடுகளில் கையொப்பமிட அனுமதிக்கப்படுகிறார்கள்.
- முதல் நிலை சரிபார்ப்பு நிராகரிக்கப்பட்ட கருவிகள் திருத்தத்திற்காக தயாரிப்பாளர்களிடம் அனுப்பப்படுகின்றன.
- முதல் நிலை சரிபார்ப்பு நிறைவடைந்த மின்னணு வாக்குப்பதிவு கருவிகள் இரட்டைப் பூட்டு போடப்பட்டு, கண்காணிப்பு கேமரா வசதியுடன் குறைந்தளவு 1 பிரிவு ஆயுதப் பாதுகாப்பு கொண்ட காப்பு அறைகளில் வைக்கப்படுகின்றன.

## பயிற்சி மற்றும் விழிப்புணர்வுக்கான மின்னணு வாக்குப்பதிவு கருவிகள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள்.

- முதல் நிலை சரிபார்ப்பு முடிந்தவுடன், தேசிய மற்றும் மாநில அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சிகளின் முன்னிலையில் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நோக்கத்திற்காக 10% வரையிலான மின்னணு வாக்குப்பதிவு கருவிகள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் வெளியே எடுக்கப்படுகின்றன.
- விழிப்புணர்வு மற்றும் பயிற்சிக்காக எடுக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு கருவிகள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் பட்டியல் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு பகிரப்படுகிறது.

- விழிப்புணர்வு மற்றும் பயிற்சிக்காக எடுக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு கருவிகளும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளும் தனித்தனியாக அதற்கென ஒதுக்கப்பட்ட தனி காப்பு அறையில் வைக்கப்படுகின்றன.

- தேர்தல் அறிவிக்கப்படும் வரையில் மின்னணு வாக்குப்பதிவு கருவிகளின் செயல்விளக்க மையங்கள் (EDC), மாவட்ட தேர்தல் அலுவலகத்திலும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தலைமையிடத்திலும் வருவாய் உட் - கோட்ட அலுவலகங்களிலும் அமைக்கப்படுகின்றன.

- அனைத்து வாக்குச் சாவடி அமைவிடங்கள் / வாக்காளர் கல்வியறிவு மன்றங்களை உள்ளடக்கும் வகையில், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி /பிரிவுக்கும் நடமாடும் செயல்முறை விளக்க வாகனம் (MDV) பயன்படுத்தப்படுகிறது.

- தொடக்கத்தில் மேற்கொள்ளப்படும் முதல் நிலை சரிபார்ப்பு, சமவாய்ப்புக்குட்படுத்துதல் மற்றும் செயல்பாட்டு நிலைக்குக் கொண்டு வருதல் ஆகியவற்றுக்குப் பின்னர், தேவைப்படுமாயின், பயிற்சி மற்றும் விழிப்புணர்வுக்காக பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்கள் தேர்தல் பணியில் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன.

## ➤ மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் / வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களைச் சமவாய்ப்புக்குட்படுத்துதல்

- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் /வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களின் சமவாய்ப்புக்குட்படுத்துதல் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் உருவாக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திர மேலாண்மை அமைப்பு முறையை (EMS) பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன.

- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களை சட்டமன்றத் தொகுதி / பகுதிவாரியாக ஒதுக்கீடு செய்வதற்காக, தேசிய மற்றும் மாநில அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சிகளின் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களின் முதல் முறை சமவாய்ப்புக்குட்படுத்துதல் நடத்தப்படுகிறது.

- முதல் முறைஇ சமவாய்ப்புக்குட்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களின் பட்டியல் (சட்டமன்றத் தொகுதி / பிரிவு வாரியாக) தேசிய மற்றும் மாநில அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சிகளுடன் பகிர்ந்துக்கொள்ளப்படுகிறது.

- போட்டியிடும் வேட்பாளரின் பட்டியலை இறுதி செய்த பின்னர், முதல் முறை சமவாய்ப்புக்குட்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களின் பட்டியலும் (சட்டமன்றத் தொகுதி / பகுதி வாரியாக) போட்டியிடும் வேட்பாளருடன் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களை செயல் நிலைக்கு கொண்டு வருவதற்கு முன்னர், அவற்றை வாக்குச்சாவடி வாரியாக போட்டியிடும் வேட்பாளர்கள் முன்னிலையில் ஒதுக்கீடு செய்வதற்காகவும், இருப்புக் காப்பில் வைப்பதற்காகவும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கை சரிபார்க்கும் இயந்திரங்களின் இரண்டாவது முறை சமவாய்ப்புக்குட்படுத்துதல் நடத்தப்படுகிறது.

- இரண்டாவது முறை சமவாய்ப்புக்குட்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களின் பட்டியல் போட்டியிடும் வேட்பாளர்களுடன் பகிரப்படுகிறது.

## ➤ மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களை செயல் நிலைக்கு கொண்டு வருதல்

- வாக்குப்பதிவிற்கு பயன்படுத்துவதற்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களை செயல் நிலைக்கு கொண்டு வருவது மாவட்ட அதிகாரியால் போட்டியிடும் வேட்பாளர்கள் முன்னிலையில் செய்யப்படுகிறது.

- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களின் காப்பறை, மேற்சொன்ன கருவிகளைச் செயல் நிலைக்கு கொண்டு வரும் நாளன்று காணொலிப் பதிவு செய்யப்பட்டு வேட்பாளர்கள்/அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படுகிறது.

- வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரம் ஒவ்வொன்றிலும் சின்னம் பதிவுவேற்றம் கருவி (SLU) வாயிலாக சின்னம் பதிவு செய்யப்படுகிறது. வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களில் பதிவு செய்யப்படும் சின்னங்கள், வேட்பாளர்கள் /அவர்களின் பிரதிநிதிகள் பார்க்கக்கூடிய வகையில் அவை பதிவு செய்யப்படும் நேரத்திலேயே காட்சித்திரையில் / தொலைக்காட்சித் திரையில் காட்சிப்படுத்தப்படுகிறது.

- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களைச் செயல் நிலைக்கு கொண்டு வருவதற்கு அவை ஒவ்வொன்றிலும் "இவர்களில் எவருமில்லை" (நோட்டா) உட்பட ஒவ்வொரு வேட்பாளருக்குரிய பொத்தானை ஒவ்வொரு வாக்கினை செலுத்துவதன் வாயிலாக சரிபார்க்கப்படுகிறது.


- மேலும், உத்தேசமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 5% மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களில் உயரளவு மாதிரி வாக்குப்பதிவில் 1000 வாக்குகள் பதிவு செய்யப்பட்டு, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் மின்னணு முடிவுகள் வாக்காளர் தாம் அளித்த வாக்கை சரிபார்க்கும் இயந்திர சீட்டுகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுச் சரிபார்க்கப்படுகிறது.

- வேட்பாளர்கள் /அவர்களுடைய பிரதிநிதிகள் 5% மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களைத் தோராயமாக தேர்ந்தெடுக்கவும், மாதிரி வாக்குப்பதிவு செய்யவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.


- வாக்குச் சாவடிக்கு ஒதுக்கப்பட்டுள்ள யாதொரு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்கள் அவற்றைச் செயல்பாட்டு நிலைக்குக் கொண்டு வரும் போது செயல்படாமல் இருப்பது கண்டறியப்பட்டால், இருப்புக் காப்பில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களை கொண்டு அவை மாற்றியமைக்கப்படும்.


- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களை மூடி முத்திரையிடுவதற்குப் பயன்படுத்தப்படும் முத்திரைகளில் வேட்பாளர்கள் /அவர்களின் பிரதிநிதிகள் கையொப்பமிட அனுமதிக்கப்படுகிறார்கள்.

- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கை சரிபார்க்கும் இயந்திரங்கள் செயல்பாட்டு நிலைக்கு கொண்டு வரப்பட்ட பின்னர், அவை இரட்டை பூட்டு அமைப்பு முறையின் கீழ் வேட்பாளர்கள் /அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் காப்பறையில் வைக்கப்படுகின்றன.




SLU



## வாக்குச்சாவடி பணியாளர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கை சரிபார்க்கும் இயந்திரங்களை வழங்குதல்

- வாக்குப்பதிவு இயந்திரங்களை வழங்கும் நாளன்று மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கை சரிபார்க்கும் இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள காப்பறையானது, காணொலிப் பதிவு வாயிலாக வேட்பாளர்கள் / அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படுகிறது.

- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்கள் வேட்பாளர்கள் / அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் வாக்குச்சாவடி பணியாளர்களிடம் வழங்கப்படுகிறது.

- வாக்குச்சாவடி பணியாளர்களுக்கு வழங்கப்படும் யாதொரு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களை வேளையில் செயல்படவில்லை எனில், இருப்புக் காப்பிலுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களைக் கொண்டு வாயிலாக அவை மாற்றியமைக்கப்படும்.

## வாக்குப்பதிவு நாள்

- வாக்குப்பதிவு நாளில், உண்மையான வாக்குப்பதிவு தொடங்குவதற்கு 90 நிமிடங்களுக்கு முன்னர், ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் போட்டியிடும் வேட்பாளர்களால் நியமிக்கப்பட்ட வாக்குச் சாவடி முகவர்கள் முன்னிலையில் குறைந்தது 50 வாக்குகள் (இவர்களில் எவருமில்லை (நோட்டா) உட்பட ஒவ்வொரு வேட்பாளருக்கும் குறைந்தளவாக 1 வாக்கு) என மாதிரி வாக்கெடுப்பு நடத்தப்படுகிறது. மாதிரி வாக்குப்பதிவின் மின்னணு முடிவுகள் வாக்காளர் தாம் அளித்த வாக்கை சரிபார்க்கும் இயந்திரத்தின் சீட்டு எண்ணிக்கையுடன் கணக்கிடப்படுகிறது.

- மாதிரி வாக்குப்பதிவு தரவுகள் கட்டுப்பாட்டுக் கருவியிலிருந்து அழிக்கப்பட்டு, வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரத்தின் சீட்டுகள் கருப்பு உறையில் வைக்கப்பட்டு இளஞ்சிவப்பு காகித முத்திரையைக் கொண்டு மூடி முத்திரையிடப்படும்.

- வாக்குச்சாவடி தலைமை அலுவலர் இத்தகைய மாதிரி வாக்குப்பதிவிற்கான சான்றிதழைத் தயாரிப்பார்.

- உண்மையான வாக்குப்பதிவை தொடங்குவதற்கு முன், கட்டுப்பாட்டுக் கருவி பச்சை காகித முத்திரை, சிறப்பு அட்டை மற்றும் முகவரி அட்டை ஆகியவற்றை கொண்டு மூடி முத்திரையிடப்படுகிறது. வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரத்தில் அச்சிடப்பட்ட சீட்டு விழும் (Drop) பெட்டியும் (வாக்குப் பெட்டி) முகவரி அட்டையைக் கொண்டு மூடி முத்திரையிடப்படும்.

- வாக்குப்பதிவு நிறைவடைந்தவுடன், வாக்குச்சாவடி தலைமை அலுவலர் வாக்குப்பதிவை நிறைவு செய்வதற்கு கட்டுப்பாட்டுக் கருவியின் 'மூடு' (CLOSE) எனும் பொத்தானை அழுத்துவார். வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரத்திலிருந்து மின்கலம் அகற்றப்படும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்கள் அவற்றை எடுத்துச்செல்லுவதற்கான உரிய பெட்டிகளில் வைக்கப்பட்டு, முகவரி அட்டையைக் கொண்டு மூடி முத்திரையிடப்படும்.

- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் இயந்திரங்களை மூடி முத்திரையிடுவதற்குப் பயன்படுத்தப்படும் முத்திரைகளில் (வாக்குப்பதிவு தொடங்கும் முன் மற்றும் வாக்குப்பதிவு நிறைவடைந்ததும்) வாக்குச்சாவடி முகவர்கள் கையொப்பமிட அனுமதிக்கப்படுவார்கள்.

- போட்டியிடும் வேட்பாளர்களால் நியமிக்கப்பட்ட வாக்குச் சாவடி முகவர்கள் வாக்குச் சாவடிகளில் இருந்து வாக்குப்பதிவு நடவடிக்கையைக் கண்காணிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் - வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவி மற்றும் பயன்படுத்தப்பட்ட முத்திரைகள், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவான வாக்குகள் உள்ளிட்ட வாக்காளர்களின் விவரங்களைக் கொண்ட படிவம் 17 C-ன் நகல் வாக்குச்சாவடி முகவர்களுக்கு வழங்கப்படுகிறது.

## வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளை (VVPATs) வாக்குச் சாவடிகளிலிருந்து சேகரிப்பு மையத்திற்கு கொண்டு செல்லுதல்

- வாக்குப்பதிவு நிறைவடைந்ததும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் (VVPATs) வாக்குச்சாவடியில் இருந்து சேகரிப்பு மையத்திற்கு காவற்படையின் துணையுடன் கொண்டு செல்லப்படுகின்றன.

- வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் ஆகியவற்றைக் கொண்டு செல்லும் வாகனங்களைப் பின்தொடர்ந்து செல்ல வேட்பாளர்கள் / வாக்குச் சாவடி முகவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

## வாக்குப்பதிவுக்குப் பின்னர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளை பாதுகாப்பாக வைத்தல்

- வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் (VVPATs) வேட்பாளர்கள் / அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் காப்பறையில் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன.

- வேட்பாளர்கள் / அவர்களின் பிரதிநிதிகள் காப்பறையின் பூட்டுகளில் தங்கள் முத்திரைகளைப் பதிப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

- வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் வைக்கப்பட்டுள்ள காப்பறை குறைந்தளவு ஒரு படைப்பிரிவு அளவிலான ஆயுதக் காவல் படையையும் (CAPF) மற்றும் கண்காணிப்புப் படக்கருவியையும் கொண்டுள்ளது.

- வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) உள்ள காப்பறைக்கு இரண்டு அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உள்அடுக்கு மத்திய ஆயுத காவல்படை (CAPF) யின் கட்டுப்பாட்டிலும் வெளிஅடுக்கு மாநில ஆயுதப்படையின் கட்டுப்பாட்டிலும் இருக்கும். யாதொரு நபரும் உள்அடுக்கினுள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

- வேட்பாளர்கள் / அவர்களின் பிரதிநிதிகள் காப்பறையைக் கண்காணிக்க அனுமதிக்கப்படுகிறார்கள், காப்பறையின் நுழைவாயில் தெரியவில்லை எனில், கண்காணிப்புப் படக்கருவி காட்சித்திரை வசதி வழங்கப்படுகிறது. வாக்களிக்கப்படாத, செயல்படாத மற்றும் பயன்படுத்தப்படாத இருப்புக் காப்பிலுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகள் தனியே பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன.

## வாக்கு எண்ணுகை நாள்

- வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள காப்பறை வேட்பாளர்கள் / அவர்களின் பிரதிநிதிகள், தேர்தல் நடத்தும் அலுவலர், இந்திய தேர்தல் ஆணையத்தின் பார்வையாளர் முன்னிலையில் வாக்கு எண்ணுகை நாளில் திறக்கப்படுவது காணொலி பதிவு செய்யப்படுகிறது.

- வேட்பாளர்கள் மற்றும் அவர்களால் பணியமர்த்தப்பட்ட வாக்கு எண்ணுகை முகவர்கள் முன்னிலையில் வாக்கு எண்ணுகை நடைபெறும்.

- வாக்கு எண்ணுகை நாளில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் கட்டுப்பாட்டு கருவிகள் கண்காணிப்பு படக்கருவியின் கண்காணிப்பில் காப்பறையிலிருந்து வாக்கு எண்ணும் மேசைக்குக் கொண்டு வரப்பட்டு, வேட்பாளர்கள் / வாக்கு எண்ணுகை முகவர்களால், முத்திரை சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்ட பிறகு கட்டுப்பாட்டு கருவியில் உள்ள முடிவு "முடிவு" ('RESULT') பொத்தானை அழுத்துவதன் வாயிலாக கட்டுப்பாட்டு கருவியின் காட்சித்திரையில் முடிவுகள் காட்சிபடுத்தப்படும்.

- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் வாரியான முடிவுகள், படிவம் 17 C-ல் வாக்கு எண்ணும் மேற்பார்வையாளரால் பதிவு செய்யப்பட்டு, சுற்று வாரியான முடிவைத் தொகுப்பதற்காக தேர்தல் நடத்தும் அலுவலருக்கு (RO) அனுப்பப்படும்.

- வாக்கு எண்ணுகை நிறைவடைந்த பிறகு, ஒரு சட்டமன்றத் தொகுதி / பிரிவு ஒன்றுக்கு அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிவு செய்யப்பட்ட 5 வாக்குச்சாவடிகளின் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவியின் சீட்டுகள் கட்டாய சரிபார்ப்பு செய்யப்படுகிறது.

- வாக்கு எண்ணுகை முடித்த பிறகு, மின் சேமக் கலங்கள் (power packs) கட்டுப்பாட்டுக் கருவிகளில் இருந்து அகற்றப்பட்டு, கட்டுப்பாட்டுக் கருவிகள் மூடி முத்திரையிடப்பட்டு அவற்றை எடுத்துச் செல்கிற பெட்டிகளில் வைத்து மூடி முத்திரையிடப்படுகின்றன.

- வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் அனைத்திலும் உள்ள, வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் சீட்டுகள் அகற்றப்பட்டு, கண்காணிப்புப் படக்கருவியின் கண்காணிப்பில் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவி வாரியாக உறைகளில் வைத்து மூடி முத்திரையிடப்படுகின்றன.

- அதன்பிறகு, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் வைக்கப்படும் காப்பறையில் வைக்கப்பட்டு, வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவியின் சீட்டுகளின் மூடி முத்திரையிடப்பட்ட உறைகள் சட்டப்படியான ஆவணங்களுடன் தனி பெட்டிகளில் வைக்கப்படுகின்றன.

- வேட்பாளர்கள் / அவர்களின் பிரதிநிதிகள் முத்திரைகளில் கையொப்பமிட அனுமதிக்கப்படுகிறார்கள்.

**குறிப்பு:-** மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் (VVPATs) தொழில்நுட்பக் கூறுகள் மற்றும் நிருவாக நடைமுறைகள் பற்றிய விவரங்களுக்கு இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் இடம்பெற்றுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) பற்றிய விளக்கக்காட்சி, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் நிலையைக் குறிக்கும் தாள் (status paper) மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பற்றிய கையேட்டைக் காண்க.

***************

# உங்கள் வாக்கினை பதிவு செய்தல்

## மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும்
## வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதிசெய்யும் கருவி மூலமாக

### 1 வாக்குச்சாவடிக்குள் நுழையவும்

நீங்கள் வாக்களிக்கும்
பகுதிக்குள் நுழையும் போது
தலைமை வாக்குச்சாவடி அலுவலர்
வாக்கு பதிவு கருவியினை
பதிவுக்கு தயார் நிலையில் வைப்பார்

### 2 உங்கள் வாக்கினை அளிக்கவும்

வாக்குப் பதிவு கருவியில் உள்ள
உங்கள் விருப்ப வேட்பாளரின்
பெயர் / சின்னத்திற்கு எதிரே
உள்ள நீலநிற பொத்தானை
அழுத்தவும்.




### 3 விளக்கினை பார்க்கவும்

நீங்கள் தேர்வு செய்த
வேட்பாளரின்
பெயர் / சின்னம்,
எதிரே சிவப்பு நிற
விளக்கு ஒளிரும்.

### 4 ஒப்புகைச் சீட்டினை பார்க்கவும்

நீங்கள் தேர்வு செய்து வாக்களித்த
வேட்பாளரின் பெயர் மற்றும் சின்னம்,
வரிசை எண் உள்ளடக்கிய வாக்குப் பதிவு
அலகின் இரசீதினை அச்சுபொறி அச்சிடும்

இந்த வாக்குப் பதிவு ரசீதினை ஏழு நொடிகள்
வரை பார்க்க இயலும். பின்னர்
அது துண்டிக்கப்பட்டு அச்சுப் பொறியின்
கீழ்ப்பகுதியில் உள்ள பெட்டியில் விழுந்து விடும்.
மேலும், சத்தமான பீப் ஒலி கேட்கும்.

**கவனிக்க**

வாக்குப்பதிவு இரசீதினை பார்க்கவில்லை
என்றாலோ, சத்தமான பீப் ஒலிகேட்கவில்லை
என்றாலோ தலைமை வாக்குச்சாவடி
அலுவலரை அணுகவும்.

**இந்திய தேர்தல் ஆணையம்**
**தலைமை தேர்தல் அதிகாரி, தமிழ்நாடு**

www.elections.tn.gov.in / call 1950
www.eci.gov.in

Election Commission of India
இந்திய தேர்தல் ஆணையம்